தமிழ்நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1973 ஆகஸ்ட் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர்** கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

கோவா–டையூ–டாமன் முதலமைச்சர் திரு. தயானந்த பாலகிருஷ்ண பண்டோக்கர் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோவா-டையூ-டாமன் மாநிலத்தின் முதலமைச்சர் திரு. தயானந்த பாலகிருஷ்ண பண்டோக்கர் அவர்கள் பஞ்ஜியில் 12—8—1973 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து, இப்பேரவையின் சார்பில் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கும் அம்மாநில மக்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மௌனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மௌனமாக நின்றார்கள்).

2. வினுக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினுக்கள்

Cases pending before the Tribunal for Disciplinary Proceedings

*99 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state the number of cases of Gazetted and Non-Gazetted Officers pending before the Tribunal for Disciplinary Proceedings as at present and the period of pendency?

[1973 ஆகஸ்ட் 13

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றத்தில் முடிவுறா நிலையில் உள்ள வழக்குகளாவன:—

(1) அரசிதழ்ப் பதிவு அதிகாரிகள்—20.

(2) அரசிதழ்ப் பதிவிலா அதிகாரிகள்—71.

வழக்குகள் முடிவுறாமல் உள்ள கால அளவு	ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றத்தின் முன் முடிவுறா நிலையில் உள்ள வழக்குகள்
1967 முதல்	1
1968 முதல்	1
1969 முதல்	19
1970 முதல்	19
1971 முதல்	27
1972 முதல்	24
1973 முதல் (1-2-73 நிலவரப்படி)	ஒன்றுமில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, அவர்களில் எத்தனை பேர் சஸ்பென்ஷனில் இருக்கிறார்கள்? பலர் நீண்டகாலமாக சஸ்பென்ஷனில் இருப்பதாகத் தெரிகிறது. அந்த வழக்குகளை டிஸ்போசல் செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எத்தனை பேர் சஸ்பென்ஷனில் இருக்கிறார்கள் என்ற விபரம் இல்லை. ஆனால் இப்போது வழக்குகள் வேகமாக முடிவு செய்யப்பட்டு வருகின்றன. சென்னை, திருச்சி, மதுரையில் 1970-ல் 52, சென்னை, திருச்சி, மதுரையில் 1971-ல் 52, சென்னை, திருச்சி, மதுரையில் 1972-ல் 51 என்ற அளவில் வேகமாக இந்த வழக்குகள் முடிக்கப்பட்டு வருகின்றன.

1973 ஆகஸ்ட் 13]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கூடுதல் நடுவர்களை நியமித்து, இந்த வழக்குகள் 1968, 1969-லிருந்தே ஆரம்பமாகியிருப்பதால், இந்த வழக்குகளை பைசல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே வேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் கூடுதலாக நடுவர்களை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே சென்னையிலே வழக்குகள் மிகவும் குறைந்துவிட்ட காரணத்தினால் நாம் திருச்சியிலே உள்ள நடுவர் மன்றத்தை மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், 1969-ல் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகள் இன்னும் எத்தனை பெண்டிங்கில் இருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1969-ல் 19, 1970-ல் 19.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, என்னென்ன காரணங்களுக்காக இந்த அதிகாரிகள்மீது வழக்குகள் போடப் பட்டன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிகாரிகள்மீது என்னென்ன காரணங்களுக்காக வழக்குகள் போடுவார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிந்தது தான்.

Disbursement of Provident Fund accumulations

* 100 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state the number of pending applications of retired Non-Gazetted Officers in Tamil Nadu for disbursement of their Provident Fund accumulations for more than six months?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 28—2—73 அன்றுள்ளபடி, 15 விண்ணப்பங்கள் மட்டுமே ஆறு திங்களுக்கு மேலாக முடிவு செய்யப்படாமல் உள்ளன என்று சென்னை மாநிலக் கணக்காய்வுத் தலைவர் தெரிவித்துள்ளார்.